பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

31 07 2026 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேர்வு முறைகேடுகளைத் தடுக்க வகை செய்யும் சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2. இந்த மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பது, தேர்வு நடைமுறைகளை வலுப்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் இருப்பதையும் தரமான மருந்துகள் கிடைப்பதையும் மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் 5 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் ஈட்டி எறிதலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா, ரோஹித் யாதவ் மற்றும் யஷ்வீர் சிங் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தேர்வு முறைகேடுகளைத் தடுக்க வகை செய்யும் சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாநிலங்களவையில் இதுதொடர்பான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், இந்த மசோதா முக்கிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

தேர்வு முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு 10 ஆண்டுகள் விரை சிறை தண்டனை, 10 கோடி ரூபாய் அபராதம் மற்றும் குற்றவாளிகளின் சொத்துகளை பறிமுதல் செய்வது போன்ற கடுமையான தண்டனைகளை வழங்க இது வகை செய்வதாக கூறினார்.

வழக்குகளை விரைந்து முடிக்க மாநில அரசுகள் சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் அமைப்பதை இச்சட்ட மசோதா கட்டாயமாக்குவதாக அவர் குறிப்பிட்டார்.

தேர்வு முறைகேடுகள் முக்கியமான பிரச்சினை என்று அவர் தெரிவித்தார்.

வினாத்தாள் முன்கூட்டியே வெளியாவதை தடுப்பதற்கும், கல்வி முறையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வரவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை அவர் பட்டியலிட்டார்.

அமைச்சரின் பதிலுரையின்போது எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் இந்த மசோதா குரல் வாக்கெடுப்பு மூலம் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.

மக்களவையில் ஏற்கனவே இந்த மசோதா நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

<<<<>>>>

தேர்வு முறைகேடுகளை தடுக்க வகை செய்யும் சட்ட மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பது, தேர்வு நடைமுறைகளை மேலும் வலுப்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவில், இதனைத் தெரிவித்துள்ளார்.

நம்பகமான தேர்வு முறையை உருவாக்க அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

கடந்த பல ஆண்டுகளாகவே வினாத்தாள் முறைகேடு பிரச்சினை நிலவுவதாகவும், இது மாணவர்களின் எதிர்காலத்தை பாதிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைக் கருத்தில்கொண்டு கல்வி மற்றும் தேர்வு முறைகளில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதனடிப்படையில் கடுமையான சட்ட விதிகளைக் கொண்ட மசோதாவை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளதாகவும், இது மாணவர்களின் நலனைப் பாதுகாத்து, வெளிப்படையான தேர்வு முறையை ஊக்குவிக்கும் என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

அறநிலையத்துறை சார்பில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தும் இனி ஆன்லைன் முறையிலேயே மேற்கொள்ளப்படும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

(Voice Byte – Ramesh – 44 Sec)

**<<<<>>>>**

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் இருப்பதையும் தரமான மருந்துகள் கிடைப்பதையும் மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மதுரை, கோபிசெட்டிபாளையம், தேனி ஆகிய இடங்களில் அரசு மருத்துவமனைகளில் அலட்சியம் மற்றும் தவறான சிகிச்சைகள் குறித்த தகவல்கள் வெளியாகி இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசு மருத்துவமனைகளின் மேம்பாட்டிற்காக த.வெ.க. அரசு இதுவரை எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மாற்றம் என்று கூறி ஆட்சிக்கு வந்த தவெக அரசு நிர்வாகம் தெரியாமல் திணறி வருவதாக அவர் கூறியுள்ளார்.

இனியாவது மக்களின் அடிப்படைத் தேவைகளையும், பிரச்சினைகளையும் அரசு கவனிக்க வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

வடலூர் சத்தியஞான சபையின் பெருவெளியில் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் மாநில அரசு தெரிவித்துள்ளது.

அங்குள்ள 70 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச மையம் அமைப்பது தொடர்பாக கடந்த 2023ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அரசாணைக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள்,

நீதிபதிகள் திரு. ஜெயச்சந்திரன், திரு. சௌந்தர் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஜோதி தரிசனத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில், மாற்று இடத்தில் நூலகம், யோகசாலை உள்ளிட்டவை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அறநிலையத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சத்திய ஞானசபை வசம் உள்ள 71 ஏக்கர் நிலத்தைச் சுற்றி சுவர் அமைக்கப்படும் என்றும் அரசுத்தரப்பில் கூறப்பட்டது.

இதை ஏற்ற நீதிபதிகள் வழக்கு விசாரணையை 4 வாரங்களுக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

இந்நிலையில் இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள பாமக தலைவர் திரு. அன்பு மணி ராமதாஸ், பெருவெளியில் சர்வதேச மையம் அமைக்கும் திட்டம் கைவிடப்படுவதாக அரசு கூறியுள்ளதை வரவேற்பதாக தெரிவித்துள்ளார்.

வள்ளலாரின் நோக்கங்களுக்கு எதிராக முந்தைய திமுக அரசால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது என்று திரு. அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

**<<<<>>>>**

அரசின் நலத்திட்டங்கள் கடைக்கோடி மக்களைச் சென்றடைவதில் செய்தியாளர்களின் பணி முக்கியமானது என்று பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தென்மண்டல தலைமை இயக்குநர் திரு. பழனிசாமி கூறியுள்ளார்.

நாமக்கல்லில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான பயிலரங்கில் பேசிய அவர், செய்திகளை நம்பகத்தன்மையுடன் மக்களுக்கு வழங்க வேண்டும் என்று கூறினார்.

நவீன தொழில்நுட்பங்களை செய்தியாளர்கள் பயன்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் செய்திகளை சரிபார்த்து துல்லியமாக மக்களுக்கு வழங்க வேண்டும் என்றும் திரு. பழனிசாமி அறிவுறுத்தினார்.

**<<<<>>>>**

தமிழகத்தில் நீலகிரி, தேனி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்கள் மற்றும் வட தமிழகத்தின் உள் மாவட்டங்களின் சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர்.

------------

அடல் புதுமைக் கண்டுபிடிப்பு இயக்கத்தின் கீழ் புதுமைக் கண்டுபிடிப்பாளர்களுடன் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று கலந்துரையாட உள்ளார்.

------------

ராஜஸ்தானின் கோட்டாவில் அமைக்கப்படும் விமான நிலைய பணிகளின் முன்னேற்றம் குறித்து மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு ஆய்வு செய்தனர்.

------------

ஐ.நா.வின் சர்வதேச தொழிலாளர் அமைப்பும், இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பும் இணைந்து புதுதில்லியில் ஏற்பாடு செய்துள்ள சர்வதேச தொழிலாளர் நலன் தொடர்பான உச்சிமாநாட்டில் மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இன்று உரையாற்றுகிறார்.

------------

மத்திய அரசின் கல்வி உதவித் தொகைத் திட்டங்களின் கீழ் தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்த சுமார் 26 லட்சம் மாணவர்கள் பயன் அடைந்திருப்பதாக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் திரு ராம்தாஸ் அதவாலே கூறியுள்ளார்.

------------

சென்னை விமான நிலையத்தில் 2 ஆயிரத்து 467 கோடி ரூபாய் மதிப்பில் நவீனமயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு. முரளிதர் மொகல் கூறியுள்ளார்.

------------

சென்னையில் இன்று நடைபெற உள்ள காவல்துறையினருக்கான பதக்கங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. விஜய் கலந்துகொண்டு பதக்கங்களை வழங்க உள்ளார்.

------------

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுநர்களுக்கு கலந்தாய்வு மூலம் பதவி உயர்வு மற்றும் இடமாறுதலுக்கான ஆணைகளை மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. முகமது பர்வேஸ் சென்னையில் நேற்று வழங்கினார்.

------------

சென்னை தலைமைச் செயலகத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள உணவகத்தை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேஷ் குமார் திறந்து வைத்தார்.

------------

சென்னை பட்டினப்பாக்கத்தில் மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள மீன் அங்காடி வளாகத்தில் வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடைகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை மாநில அமைச்சர் திரு. வெங்கடரமணன் வழங்கினார்.

------------

*விளையாட்டுச் செய்தி*

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் ஈட்டி எறிதலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா, ரோஹித் யாதவ் மற்றும் யஷ்வீர் சிங் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

பளுதூக்குதலில் ஆடவர் 110 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் லவ்ப்ரீத் சிங் வெள்ளிப் பதக்கமும், மகளிர் வட்டு எறிதலில் சீமா வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

<<<<The End>>>>